பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
23 03 2025 **SUNDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அமெரிக்காவின் இணையஒலி நெறியாளர் **Lex Fridman** தம்முடன் நடத்திய கலந்துரையாடலை தற்போது தமிழ் உட்பட, பல்வேறு மொழிகளில் கேட்கலாம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சூரியமின் சக்தி உற்பத்திக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. ஊரக வளர்ச்சிக்காக கடந்த 4 ஆண்டுகளில் 25 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. ஊழலை மறைக்கவே தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினையை திமுக கையில் எடுத்துள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. உலக மாஸ்டர்ஸ் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**>>>>>><<<<<<**

அமெரிக்காவின் இணையஒலி நெறியாளர் **Lex Fridman** தம்முடன் நடத்திய கலந்துரையாடலை தற்போது தமிழ் உட்பட, பல்வேறு மொழிகளில் கேட்கலாம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த உரையாடல் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>><<<<<<**

சூரியமின் சக்தி உற்பத்திக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்த்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஊரக வளர்ச்சிக்காக கடந்த 4 ஆண்டுகளில் 25 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், ஆடுதுறையில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

மாநிலத்தில் உள்ள 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக 20 கோடி ரூபாய் செலவில் 100 இடங்களில் கருத்தடை மையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. முத்துசாமி கூறியுள்ளார்.

இன்று ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – முத்துசாமி 20 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

ஊழலை மறைக்கவே தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினையை திமுக கையில் எடுத்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம், ஓமலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தப் பிரச்சினை தொடர்பாக, தில்லியில் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய போராட்டத்தில் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை என்று கூறினார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கூட்டணி குறித்து தேர்தல் நேரத்தில் முடிவு எடுக்கப்படும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தேசிய கல்விக் கொள்கை குறித்து தமிழகத்தில் தவறான தகவல்கள் பரப்பப்படுவதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் கூறியுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஏழை மாணவர்கள் மூன்றாவது மொழியை கற்பதற்கு தேசிய கல்விக் கொள்கையில் வகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இதில் ஹிந்தி திணிப்பு இல்லை என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் கூறினார்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 22 செகண்ட்ஸ்)

இதற்கிடையே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக உடலில் நீர்ச்சத்து குறைபாடு ஏற்படாமல் தடுக்க பொதுமக்கள் அதிக அளவு தண்ணீரை அருந்த வேண்டும் என்று டாக்டர் ஸ்பூர்த்தி அருண் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - டாக்டர் (1) 52 செண்ட்ஸ்)

குறிப்பாக, குழந்தைகள் மற்றும் முதியோர் உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் டாக்டர் ஸ்பூர்த்தி அருண் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - டாக்டர் (2) 22 செண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டு கொய்யா அமோக விளைச்சல் கண்டுள்ளது.

இதன் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரகுராஜா 47 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

போதையில்லா சேலத்தை உருவாக்கும் நோக்கில் இளையோர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

வார விடுமுறையை ஒட்டி கன்னியாகுமரிக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

>>>>>><<<<<<

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி அருகே புகழ்பெற்ற ஒழுகைமங்கலம் மாரியம்மன் கோவில் திருவிழா பூச்சொரிதல் நிகழ்ச்சியுடன் இன்று தொடங்கியது.

>>>>>><<<<<<

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே, சிறுத்தை தாக்கியதில் 3 ஆடுகள் உயிரிழந்த சம்பவம் குறித்து வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி அரசு தலைமை மருத்துவமனையில் ஆட்சியர் திருமதி. அழகுமீனா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக மாஸ்டர்ஸ் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

துருக்கியின் **Antalya**-வில் நடைபெற்ற இப்போட்டியில், 30 வயதுக்கு மேற்பட்ட ஆடவர் இரட்டையர் பிரிவில் **Lakshit Sood – Chandril Sood** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது. இப்பிரிவின் குழுப் போட்டியிலும் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

35 வயதுக்கு மேற்பட்ட கலப்பு இரட்டையர் பிரிவில் **Jitin Bishnoi – Akshitha Basavaraju** இணையும், ஆடவர் இரட்டையர் பிரிவில் **Mishal Javia – Kartikeya Singh Verma** இணையும் வெண்கலப்பதக்கம் வென்றது.

**>>>>>><<<<<<**

மியாமி ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – போர்ச்சுக்கலின் **Nuno Borges** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாதுக்கு எதிராக 287 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் ராஜஸ்தான் அணி சற்றுமுன்வரை 10 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 118 ரன் எடுத்துள்ளது.

**>>>>>><<<<<<**

சென்னையில் இரவு ஏழரை மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் சென்னை அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

**>>>>>>END<<<<<<**